[1990 சனவரி 22

சேலம் மாவட்டத்தை இரண்டாகப் பிரித்தல்.

*1542 —மாண்புமிகு திரு. வீ. பெ. துரைசாமி (பேரவைத் துணைத் தலைவர்); மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, நாமக்கல் மாவட்டம் தனியாக அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் ; (அ) மற்றும் (ஆ) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போதுள்ள சேலம் மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து நாமக்கல்லைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டம் அமைப்பது பற்றிய செயற் குறிப்பு ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு திரு. வீ. பெ. துரைசாமி : (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிர்வாக நலன் கருதி, சேலம் மாவட்டம் தமிழ்நாட்டிலே பெரிய மாவட்டங்களில் ஒன்றாக இருப்பதால், அதனை இரண்டாகப் பிரிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. தமிழக அரசு தீட்டுகின்ற நலன் சார்ந்த திட்டங்களினுடைய பரிகாரங்கள் விரைவில் மக்கள் பெற வேண்டிய அவசியம் கருதியும், நிர்வாக நலன் கருதியும், அதை இரண்டாகப் பிரிப்பதற்கு தமிழக அரசு முன்னுரிமை எதிர் காலத்தில் வழங்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : தலைவர் அவர்களே, இப்போது அது பரிசீலனையில் இல்லை.

திரு. பி. வி. இராஜேந்திரன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிர்வாகக் காரணங்களுக்காகவும், சமுதாய, பொருளாதார துரித மாற்றங்களுக்காகவும், மாவட்டங்களை இரண்டாகப் பிரித்துக் கொண்டிருக்கிற இந்த வேளையில், தமிழகத்திலே மிகப் பெரிய மாவட்டமாக இருக்கிற ஒரு மாவட்டம், அதிலும் நம்முடைய முதல்வர் அவர்களுடைய மாவட்டமே இருந்து கொண்டு இருப்பது இந்த அரசுக்குத் தெரியும். அதிலும் அந்த மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்று மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் தீர்மானம் எண் 130 மூலமாக முதல்வர் அவர்கள் குறிக்கின்ற இடத்தை தலைமையிடமாகக் கொண்டு, மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்று ஒருமனதாக தீர்மானமே நிறைவேற்றப்பட்டு இருக்கிறது.

1990 சனவரி 22]

அந்தச் சூழ்நிலையில் கிழக்குத் தஞ்சை மாவட்டத்தில் நீர் நிர்வாகத்திலே மிகப் பெரிய சண்டைகள் எல்லாம் வந்து, காவிரியிலே ஓடுகின்ற நீர் எங்களுக்கு வெண்ணாரிலே வர மறுக்கிறது ....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்விக்குத் தொடர்பு இல்லாதது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி ; தலைவர் அவர்களே, நண்பர் திரு. இராஜேந்திரன் அவர்கள் மிகத் திறமையாக இந்தக் கேள்வியைக் கேட்டுவிட்டார்கள். அவர்கள் எழுந்து தஞ்சாவூர் மாவட்டம் என்று ஆரம்பித்திருந்தால், நீங்கள் உட்கார வைத்திருப்பீர்கள். அவர், அதைச் சொல்லாமல், பொதுவான கருத்துக்களைச் சொல்லி, கடைசி வரையிலே, மாவட்டத்தினுடைய பெயரைச் சொல்லாமல், முதல்வர் பிறந்த மாவட்டம் என்ற அளவோடு நிறுத்தியிருக்கிறார்கள். அவர்களுடைய கூற்றின் படி, மாவட்ட வளர்ச்சி மன்றத்திலே எடுக்கப்பட்ட அந்த முடிவு வரவேற்கத்தக்கது என்றாலும், உரிய நேரத்திலே ஆவன செய்யப்படும்.

மாணவ மாணவிகளுக்கு இலவச பஸ் பாஸ் வழங்கும் திட்டம்

*798—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:
திரு. எம். சே. கரீம்:
திரு. சு. குருநாதன்:

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) பள்ளி, கல்லூரிகளுக்குச் செல்லும் மாணவ, மாணவிகளுக்கு இலவச பஸ் பாஸ் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது வழங்கப்படும் ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் ; தலைவர் அவர்களே,
(அ) இல்லை.
(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிகளுக்கும், கல்லூரிகளுக்கும் செல்லக்கூடிய மாணவ, மாணவிகள் மிகவும் சிரமம் அடைகிறார்கள், ஆகையினாலே, இந்த இலவச பஸ் பாஸ் இல்லாவிட்டாலும் கூட—ஒரு மாதத்திற்கு எவ்வளவு பணம் நாம் வசூல் செய்கிறோம்—கர்நாடகத்தைப் போன்று நான்கிலே ஒரு பங்காக வசூல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.